www.Padasalai.Net www.TrbTnpsc.com

# RK TUITION CENTRE – KUMBAKONAM

| பத்தாம் வகுப்பு தமிழ் | தேர்வு – 4 | மதிப்பெண் : 50<br>நேரம் : |
|---|---|---|

## பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 7 X 1 = 7

1. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?
   (அ) குலசேகராதழ்வாரிடம் இறைவன் (ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   (இ) மருத்துவரிடம் நோயாளி (ஈ) நோயாளியிடம் மருத்துவர்
2. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   (அ) துலா (ஆ) சீலா (இ) குலா (ஈ) இலா
3. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
   தலைப்பு : செயற்கை நுண்ணறிவு
   குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும்பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது திறன்பேசியில் வரைபடம் போக்குவரத்திற்கு வழியைக் காண்பிப்பது.
   (அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.
   (ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது
   (இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத தலைப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
   (ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
4. குலசேகர ஆழ்வார் 'வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார் - பூனை யார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே-
   (அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி (ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
   (இ) பால் வழுவமைதி, திணை வழுவதைி (ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி
5. Cosmic rays – பொருள் தருக.
   (அ) விண்வெளிக் கதிர்கள் (ஆ) அகச்சிவப்புக் கதிர்கள்
   (இ) புற ஊதாக் கதிர்கள் (ஈ) அனைத்தும்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

"விசும்பின் ஊழி ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையின் தோன்றி
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"

6. இப்பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   (அ) வானத்தையும் பாட்டையும் (ஆ) வானத்தையும் புகழையும்
   (இ) வானத்தையும் பேரொலியையும் (ஈ) வானத்தையும் பூமியையும்
7. இப்பாடலில் **'மாளாத காதல் நோயாளன்'** என்று யாரைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்?
   (அ) பக்தனை (ஆ) நோயாளியை (இ) தன்னை (ஈ) இறைவனை

## பகுதி – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** 2 X 2 = 4
**(10வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

8. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.
9. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
10. 'வாளால் அறுத்து' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடலை எழுதுக.

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** 2 X 2 = 4

11. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?
12. "சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்பான் புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றி பெருமையாக கூறினார் - இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.
13. வழு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி – 3

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 1 X 3 = 3

14. "மாளாத காதல் நொயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
15. பூமியின் தோற்றம் குறித்து பரிபாடல் கூறும் செய்திகளை விளக்குக.

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம்
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112
R. Karthi M.Sc.B.Ed.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

# RK TUITION CENTRE – KUMBAKONAM

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

16. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
17. மெய்நிகர் உதவியாளர் குறித்து அறிவன யாவை?

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

18. திணை மற்றும் பால் வழுக்களைச் சான்றுடன் விளக்குக.
19. காலம் மற்றும் மரபு வழுக்களைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – 4

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 X 4 = 8**

20. மொழிபெயர்க்க.

Malar : Devi switch off the lights when you leave the room
Devi : Yeah We have to save electricity
Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night
Devi : Who knows? in future our country may launch artificial moons to light our right time sky!
Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
Devi : Superb news! It we launch artificial moons, they can assist in disaster relief by learning light on areas that lost power!

21. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.



22. பத்தியைப் பத்து பதில் தருக.

பருப்பொருள்கள் சிதறும் படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாக தொடர்ந்து மழை பொழிக்க ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

1. பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?

## பகுதி – 5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 X 6 = 18**

23. ஒரு குழந்தையத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைக் கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
24. **‘அறிவிலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்’**என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றெழுதுக.
25. விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம்
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112
R. Karthi M.Sc.B.Ed.

www.Padasalai.Net